தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 15, திருவள்ளுவர் ஆண்டு—2052

2021 ஆகஸ்ட் 31, செவ்வாய்க்கிழமை

சென்னை—600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பொருள்கருவி காலம் வினையிடனொடைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்."

ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு முன்பு, அதற்குத் தேவையான பொருள், ஏற்ற கருவி, காலம், மேற்கொள்ளப்போகும் செயல்முறை, உகந்த இடம் ஆகிய ஐந்தையும் குறையில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

1—

தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள்

***15701—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் விற்பனையை முற்றிலும் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து, 29-8-2021 வரை தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் விற்பனை தொடர்பாகக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனை விற்பவர்கள், கடத்துபவர்கள் ஆகியோர்மீது 10 ஆயிரத்து 673 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன; 11 ஆயிரத்து 247 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து 149.43 டன் குட்கா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 113 நான்கு சக்கர வாகனங்களும், 106 இரு சக்கர வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 15 பேர் குண்டர் சட்டத்திலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை விற்றது மற்றும் கடத்தியது தொடர்பாக 2,458 வழக்குகள் போதைப் பொருள் தடுப்புப் பிரிவில் பதிவு செய்யப்பட்டு, 5,793 கிலோ கஞ்சா மற்றும் இதர போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 3,413 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களில் 81 பேர் குண்டர் சட்டத்திலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். போதைப் பொருட்கள் விற்பனை செய்வோர் மற்றும் கடத்துவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, போதைப் பொருட்கள் விற்பனை முற்றிலும் தடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16-வது சட்டமன்றப் பேரவையின் முதல் நாள் கேள்வி நேரம். அதிலும், குறிப்பாக முதல் கேள்வி. அதிலும் சிறப்பு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற வினா என்ற ஒரு பெருமை இந்த அவைக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அதை வரவேற்புக்குரியதாகப் பார்க்கிறோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை முற்றிலுமாக ஒழிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கிற நேரத்தில் 29-8-2021 வரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தெரிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 10,673 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 11,247 பேர் கைது

2021 ஆகஸ்ட் 31]

செய்யப்பட்டிருக்கிறார்கள் என கைது நடவடிக்கை, தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அறிவித்திருக்கிறார்கள். ஆனால், போதைப் பொருட்களை உற்பத்தி செய்வது, கடத்தி வருவது, விற்பனை செய்வது என்பது மாபெரும் குற்றம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தவாறு, தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும்கூட, இன்று பள்ளிகள், கல்லூரிகள், மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு முன்னால் விற்கப்படுகிறது. சென்னை மெரினா கடற்கரையில், பொது மக்கள் கூடுகிற இடங்களிலெல்லாம் வறுமைப் பிடியில் இருக்கிற குழந்தைகளை, இளைஞர்களை வைத்து விற்பனை செய்கிறார்கள். இது சாதாரணமான விஷயம் அல்ல. குறிப்பாக, ஹான்ஸ், பான் மசாலா, கஞ்சா, குட்கா போன்ற போதைப் பொருட்கள் வட மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்படுகின்றன. தமிழ்நாட்டிலே விற்பனை செய்யப்படுகின்றன; பதுக்கியும் வைக்கப்படுகின்றன. தீய பழக்கத்தில் ஈடுபட்டு, நட்புக்காகவும், உற்சாகம் கொடுக்கிறது என்பதற்காகவும் இவற்றை மாணவ, மாணவிகள் வாங்கி பழக்கப்படுத்திக் கொண்டு, நாளடைவில் இதற்கு அடிமையாகிவிடுகிறார்கள். இந்த அடிமைத்தனம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *அவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி, உடல்நலத்தையும், உள்ளத்தையும் கெடுத்து, அவர்களின் குடும்பங்களைச் சீரழிக்கிற, சமுதாயத்தையே சீரழிக்கிற ஒரு நிகழ்வாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.*

முற்பகல் 10–05

திரு. ஜி.கே. மணி: *ஆகவே, இந்தத் தடை நடவடிக்கை என்பது, சமுதாயத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை. இதற்கென 1985 ஆம் ஆண்டு போதை மற்றும் மன மயக்கப் பொருட்கள் தடைச் சட்டம் இருக்கிறது. அந்தத் தடைச் சட்டத்தில் மேலும் திருத்தங்களைக் கொண்டுவந்து, தலைநகர் சென்னை உட்பட தமிழ்நாடு முழுவதும் இதை முற்றிலுமாக ஒழிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்கள் சொன்னதுபோல, ஏற்கெனவே போதை மற்றும் மன மயக்கப் பொருட்கள் தடைச் சட்டம் 1985–ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தாலும், பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அருகிலே போதைப் பொருட்கள் விற்பனை செய்வோருக்குக் கடுமையான தண்டனைகள் வழங்க அந்தச் சட்டத்திலே புதிய திருத்தங்கள் கொண்டு வரப்படும். புதிய திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு, உரிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, சுருக்கமாக கேள்வியைக் கேளுங்கள்*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருத்தம் கொண்டு வரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதேநேரத்தில், இந்தப் பணிகளில் ஈடுபடக்கூடிய தமிழகக் காவல் துறையினர்; தேசிய போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் ஆகியோர் நடவடிக்கை எடுக்கின்றார்கள். குறிப்பாக, நம்முடைய தமிழகக் காவல் துறையில் ஆண்கள், பெண்கள், மூன்றாம் பாலினத்தவர்களான திருநங்கைகள் ஆகியோர் பணியாற்றுகின்றார்கள். காவல் துறையினுடைய பணி என்பது கடுமையானது. ஆகவே, அந்தப் பணியில் இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடும்போது மிகப் பெரிய சவால்களையும், உயிரைப் பணயம் வைத்து பணியாற்றக்கூடிய நிலையெல்லாம் ஏற்படுகிறது.* Scotland Yard-*க்கு இணையான காவல் துறை தமிழ்நாடு காவல் துறை; காற்று நுழையாத இடத்தில்கூட காவல் துறை நுழையும் என்பார்கள். இப்படிப்பட்ட தடுப்புப் பணிகளிலே காவல் துறையினர் ஈடுபடுகின்ற நேரத்தில், அவர்களுக்குப் பாதிப்பும் ஏற்படுகிறது. ஆக, இவற்றையெல்லாம் கவனத்தில்கொண்டு காவல் துறையினருக்கு ஊக்க ஊதியம், சிறப்புப் பரிசுகள்,* Risk Allowance *போன்றவையெல்லாம் வழங்கப்படுமா என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

2021 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினரை ஊக்குவிக்க நிச்சயம் இந்த அரசு தயங்காது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுகுறித்து பரிசீலித்து, ஆராய்ந்து, என்னென்ன வகையிலே அவர்களுக்குச் சிறப்பு செய்ய வேண்டுமோ, அதைப் பரிசீலித்து, அவர்களுக்குரிய ரிவார்டு நிச்சயம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

2—

கனிம வளங்கள்

***3239—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்குக் கொண்டு செல்லப்படும் மணல், ஜல்லி, செங்கல் போன்றவற்றிற்குத் தடை விதிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் ஒப்புதலுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) அண்டை மாநிலங்களுக்குக் கனிமங்களை எடுத்துச் செல்வதைத் தடுக்க சட்டத்தில் இடமில்லை. அதேநேரத்தில் சட்டவிரோதமாகவோ அல்லது அதிகப்படியான அளவிலோ கனிமங்களை அண்டை மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வதைத் தடுக்க அரசு தொடர் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.